# மாலைக்கதிர்

Maalaikkathir






சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 07 | திங்கட்கிழமை | 23.09.2024 | கதிர் 369






# ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்றார் அநுர

## ஜனாதிபதி மாளிகையில் எளிமையான நிகழ்வு

**இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க இன்று காலை பதவியேற்றார். காலி முகத் திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் எளிமையான முறையில் அவரது பதவியேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

**பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அநுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். தேசிய மக்கள் சக்தியின் முக்கிய உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட சிலர் மட்டுமே இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.**

6➤

## அநுரகுமார திசாநாயக்கவின் முதல் வெளிநாட்டு பயணம் புதுடில்லிக்கு

### இந்திய உயர் ஸ்தானிகர் அழைப்பு

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், பதவியேற்ற பின்னர் புதுடெல்லிக்கு வருமாறு இந்தியா அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நேற்றிரவு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து முதல் இராஜதந்திர சந்திப்பாக கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, புதிய ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்ட

6➤

## நவம்பர் இறுதியில் பொதுத் தேர்தல்?

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் நவம்பர் மாதத்தின் இறுதியில் நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக நாடாளுமன்றம் இரண்டு தினங்களுக்குள் கலைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் வெற்றி உரையின் போது அநுர குமாரதிசநாயக்க நாடாளுமன்ற தேர்தல் குறித்து கோடிட்டுக்காட்டியுள்ள போதிலும்எப்போது தேர்தல் இடம்பெறும் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படலாம் என்று கட்சியின் முக்கிய உறுப்பினரான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அநுர குமார திசநாயக்க தனது முன்னைய அறிவிப்புகளிற்கு ஏற்ப நாடாளுமன்றத்தை இந்த வாரம் கலைத்தால், நவம்பர் இறுதியில் தேர்தல் நடைபெறலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் கலைப்பு,தேர்தல் குறித்த அறிவிப்பு நாளை மறுதியம் வெளியாகலாம் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

## உலக நாடுகளுடன் இணைந்து முன்னோக்கி செல்லவேண்டும்

### பதவியேயற்ற பின்னர் அநுர உரை

நாட்டைக் கட்டியெழுப்பும் கூட்டுப் பணியில் அங்கம் வகிப்பது தனது பொறுப்பு என புதிய ஜனாதிபதியாக இன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே புதிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

6➤



## அநுரவை வாழ்த்திய மோடி



இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய 9ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்காக அநுரகுமார திஸாநாயககவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

“இலங்கை

6➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# முப்படைத்தளபதிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை



ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாதுகாப்பு தரப்பினரை சந்தித்து பேசியுள்ளார்.

முப்படைத் தளபதிகள், பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் இன்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது தேர்தல் காலத்தில் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படாமல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்த பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக இந்தப் பயணத்தில் வன்முறைச்செயல்களுக்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கையின் இறுதி ஜனாதிபதி

## தேசிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது

இலங்கை தனது இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்துள்ளது என ஜேவிபியின் மத்தியகுழு உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதியின் பதவிக்காலத்திற்கு பின்னர் நீங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பார்க்கமாட்டீர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நோக்கத்திற்கு மக்கள் தங்களின் ஆதரவை தரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று தெரிவித்துள்ள சுனில் ஹந்துநெத்தி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதை உறுதி செய்துள்ளார்.






## புதிய பிரதமராக ஹரிணி?

இலங்கையின் பிரதமராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று பதவிப் பிரமாணம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறும் வரை காபந்து அரசாங்க அமைச்சரவையாக அவருடன் நான்கு பேர் கொண்ட அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் தற்போதைய பாராளுமன்றம் இன்று அல்லது நாளை கலைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இதன்படி, நவம்பர் மாத இறுதியில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற அதிக வாய்ப்புகள் உள்ளன.

## ஜனாதிபதி செயலாளராக நந்திக சனத் குமாநாயக்க



புதிய ஜனாதிபதி செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அசுர குமார திசாநாயக்க இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தேசியத்தை மீளக்கட்டமைப்பதில் பொது வேட்பாளரின் பங்களிப்பு

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவுவரை தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் அதன் பின்னர் சாதிகளாகவும், சமயங்களாகவும், பிரதேசங்களாகவும், கட்சிகளாகவும் சிதறடிக்கப்பட்டுள்ளனர். தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் கைகோர்த்து திட்டமிட்டு இதனை நிறைவேற்றி வந்துள்ளனர்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட பா.அரியநேத்திரன் சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசிய உணர்வுத்தளத்தை மீளக்கட்டமைப்பதில் காத்திரமான பங்காற்றியுள்ளார். என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்யுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் குறித்து பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இனத்தைத் தேசமாகக் கட்டியமைப்பதில் அந்த இனம் பேசுகின்ற மொழி, தாயகமாகக் கொண்டிருக்கும் நிலப்பரப்பு, பண்பாடு ஆகியன வகிக்கும் பங்களிப்புகளுக்கு நிகராக தேசம் என்ற உணர்வு நிலையும் இன்றியமையாதது. யுத்தத்தின் பின்னரான தமிழர் அரசியலில் தேசம் என்கின்ற உணர்வு நிலை தமிழ்ச் சூழலில் ஊடுருவியுள்ள பெரும்பான்மைக் கடசிகளாலும் அவர்களின் எடுபிடிகளாலும் மழுங்கடிக்கப்பட்டு வந்துள்ளது.


இந் நிலையிலேயே தமிழ் மக்களைத் தேசமாக மீளவும் ஒருங்கிணைக்கும் நோக்கோடு நிறுத்தப்பட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் தான் பெற்ற கணிசமான வாக்குகளின் மூலம் தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஊட்டியுள்ளார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை கட்சிகளின் பிரதான வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் கோடான கோடி பணத்தைச் செலவழித்து தமிழ் வாக்குகளை வியாபாரப் பண்டமாக்கிக் கொள்வனவு செய்ய முயன்றனர். இதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் துணைபோயினர்.

ஆனால், விலை போகாத தமிழர்களாக இரண்டேகால் இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரின் சங்குச் சின்னத்துக்குத் தங்கள் வாக்குகளை வழங்கியுள்ளனர். தமிழ்த் தேசிய அரசியலை சீர்செய்து நேர்செய்யும் பயணத்தில் பொதுவேட்பாளர் பெற்றிருக்கும் வாக்குகள் பலமான அடித்தளத்தை உருவாக்கி இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# மாற்றங்களை விரும்பிய மக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா



நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களின் மனவிருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவித்தார்.

"தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் நாட்டின் பொருளாதார நிலைமைகளையும் மனதில் நிறுத்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்து செயலாற்றி இருந்தோம். ஆனாலும் எமது நம்பிக்கைகளுக்கு மாற்றாக இலங்கைத் தீவில் வாழுகின்ற மக்களில் கணிசமானவர்கள் ஆட்சி மாற்றம் ஒன்றையே தமது விருப்பமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் மனவிருப்பங்களிற்கு நாம் மதிப்பளிக்கின்றோம்.

அதேவேளை சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் ஜனாதிபதி தோழர் அநுர குமார திசாநாயக்க அவர்கள் அனைத்து மக்களினதும் கனவுகளை ஈடேற்றுவார் என்பதையும் எதிர்பார்க்கிறோம்,...

எமது வேண்டுகோளை ஏற்று எமது அரசியல்வழிநின்று வாக்களித்த மக்களுக்கும், தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றும் வகையில் வாக்களிப்பில் கலந்து கொண்ட அனைத்து மக்களிற்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

இதுவரை கால எமது நாடாளுமன்ற அரசியலில், தேசிய நல்லிணக்க வழிமுறை வரலாற்றில் அரசுகளுக்கு உள்ளிருந்தும் வெளியே இருந்தும் மக்கள் நலன் சார்ந்து நாம் உறுதியுடன் செயலாற்றி வருகின்றோம்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே என்றும் மாறாத எமது அரசியல் இலக்கு என்றும்" அந்த அறிக்கையில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# அநுரவின் இடத்துக்கு லக்ஷ்மன் நிபுணஆரச்சி

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரி வானதைத் தொடர்ந்து, வெற்றிட மாகியுள்ள



அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு லக்ஷ்மன் நிபுணஆரச்சி நியமிக்கப்படவுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுரகுமார திசாநாயக்கவுக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்கு பட்டியலில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணரச்சி உள்ளார்.

இந்நிலையில், அவர் தேர்தல் ஆணைக்குழுவினால் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவுள்ளார்.

# சதொச அமைப்பின் தலைவர் இராஜிநாமா

சதொச அமைப்பின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலீன் பெர்னாண்டோவுக்கு தனது இராஜிநாமா கடிதத்தை வழங்கியுள்ளார்.

புதிய ஜனாதிபதிக்கு தலைவர் ஒருவரை நியமிக்கும் வாய்ப்பை வழங்கி அவர் பதவி விலகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது



# சீனவுடனா? இந்தியாவுடனா? நெருக்கமாக செயற்படுவார்?

## புதிய ஜனாதிபதியின் அணுகுமுறை தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகள்

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திசநாயக்க தேர்வுசெய்யப்பட்டுள்ளார். அவருடைய கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன ஒரு இடதுசாரி கட்சியாக அறியப்பட்டதால், அவர் இந்தியாவைவிட சீனாவுடன் கூடுதல் நெருக்கம் காட்டுவாரா?

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் வேட்பாளரான அநுர குமார திசநாயக்க தேர்வுசெய்யப்பட்டிருக்கிறார். ஜனதா விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவார் என பத்தாண்டுகளுக்கு முன்பு யாராவது சொல்லியிருந்தால், அதை ஒருவர்கூட நம்பியிருக்க மாட்டார்கள். ஆனால் அரசியல் அதிசயங்களுக்கு பெயர் போன இலங்கையில் இப்படி நடப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

தேசிய மக்கள் சக்திக்கு தலைமையேற்றுள்ள ஜனதா விமுக்தி பெரமுன கட்சித் தலைவரான அநுர குமார திசநாயக்க, இரண்டாவது இடம் பிடித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைவிட, சுமார் 12 லட்சத்து 9 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றார்.

38 பேர் களத்தில் நின்ற இந்தத் தேர்தலில், புதிய ஜனாதிபதியைத் தேர்வுசெய்ய விருப்ப வாக்குகளையும் எண்ணவேண்டி வந்தது. இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை வந்த பிறகு, விருப்ப வாக்குகள் எண்ணப்படுவது இதுவே முதல் முறை.

அதேபோல, இலங்கையின் வரலாற்றில் ஒரு இடதுசாரி தலைவர் ஜனாதிபதியாக பதவியேற்பதும் இதுவே முதல் முறை. இந்த நிலையில், இலங்கைக்கு அருகில் உள்ள பிராந்திய சக்திகளான இந்தியாவையும் சீனாவையும் புதிய ஜனாதிபதி எப்படி அணுகுவார் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இடதுசாரி சாய்வு கொண்டவர் என்பதால், இயல்பாகவே இந்தியாவைவிட சீனாவுடன் கூடுதல் நெருக்கத்தைக் காட்டக்கூடும் என்பதுதான் பொதுவான புரிதல். இந்தியாவின் இலங்கை குறித்த கொள்கையை ஜனதா விமுக்தி பெரமுன நீண்ட காலமாக விமர்சித்து வருகிறது. ஒருவித ஆதிக்க மனோபாவத்துடனேயே இலங்கையை இந்தியா அணுகுவதாக குற்றம்சாட்டியும் வந்தது.

சமீபத்திய ஆண்டுகளில் இதுபோன்ற பேச்சுகள் இல்லை என்றாலும் தற்போதைய ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில், செப்டம்பர் 16ஆம் தேதியன்று ஒரு அரசியல் விவாத நிகழ்ச்சியில் இந்தியா பற்றிய அவரது பேச்சு கவனிக்கத்தக்கதாக இருந்தது.

தான் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டால் இலங்கையில் அதானி குழும முதலீட்டில் உருவாகும் காற்றாலை மின் திட்டம் ரத்து செய்யப்படும் என்றார். அந்தத் திட்டம் இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்று அவர் குறிப்பிட்டார். இவையெல்லாம் சேர்ந்து, அநுரவை இந்தியாவுக்கு சாதகமற்ற ஜனாதிபதி என்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த விவகாரத்தில் இந்தியா ஆரம்பத்தில் இருந்தே ஜாக்கிரதையாக இருந்துவருகிறது. ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டு பணிகள் நடந்துவந்த நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா, "நாங்கள் எந்த வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை. புதிதாக தேர்வுசெய்யப்படும் ஜனாதிபதியுடன் பணியாற்ற நாங்கள் விருப்பத்துடன் இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடன் புதிய ஜனாதிபதியாகத் தேர்வுசெய்யப்பட்ட அநுர குமார திசநாயக்கவை, நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார் சந்தோஷ் ஷா.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோதியும் உடனடியாகதனதுவாழ்த்தைப் பதிவுசெய்தார்.

சமீபத்தில்தான் பங்களாதேஷில், ஆட்சி மாற்றம் நடந்திருக்கும் நிலையில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியா ஜாக்கிரதையாகவே செயல்படவிரும்புகிறது. உண்மையில், சில மாதங்களுக்கு முனபாகவே, அநுர குமாரவை தில்லிக்கு அழைத்து இந்திய அதிகாரிகள் சந்திப்புகளை நடத்தினார்கள், ஆகவே இந்தியாவின் கவனத்தில் அவர் எப்போதுமே இருந்தார் என்கிறார் லயோலா கல்லூரியின் பேராசிரியரான கிளாட்ஸன் சேவியர்.

"இந்தியாவைப் பொறுத்தவரை, அநுர குமாரவை கண்டுகொள்ளாமல் விடவில்லை. இந்த ஆண்டு பிப்ரவரியில் அவர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார். முக்கியமான தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார். பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்று அங்கேயும் பலரை சந்தித்தார். பொதுவாக இந்திய எதிர்ப்பு மனநிலை கொண்ட கட்சியாக அறியப்படும் ஜனதா விமுக்தி பெரமுனவோடு தொடர்புகொண்டு இந்தியா செயல்பட்டது இதுவே முதல் முறையாகவும் இருந்தது" என்கிறார் கிளாட்ஸன் சேவியர்.

1980களில் ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு இந்தியா குறித்து இருந்த பார்வை தற்போது மாறிவிட்டது என்கிறார் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி அகிலன் கதிர்காமர்.

"ஜனதா விமுக்தி பெரமுனவைப் பொருத்தவரை, அது பழைய ஜே.வி.பி. இல்லை. அது ஒரு மையவாதக் கட்சியாக மாறிவிட்டது. ஆனால், ரணில் விக்ரமசிங்கவைப் போல முழுமையான இந்தியச் சாய்வு கொண்டவராக அவர் இருப்பார் என சொல்ல முடியாது. ஆனால், எந்த நாட்டிற்கும் மிகவும் நெருக்கமாகவோ, விரோதமாகவோ இல்லாத ஒரு நிலையைத்தான் அவர் எடுப்பார் எனக் கருதுகிறேன். இலங்கை இன்னமும் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. இந்தத் தருணத்தில் அதீதமான நிலைப்பாடுகளை எடுப்பது சரிவராது என்பதை அவர் புரிந்துகொண்டிருப்பார் எனக் கருதுகிறேன்." என்கிறார் அகிலன் கதிர்காமர்.

2023ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 442 மில்லியன் டாலர் மதிப்பீட்டில் மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் காற்றாலைகளை அமைக்க, இந்தியாவைச் சேர்ந்த அதானி க்ரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு இலங்கையின் முதலீட்டு வாரியம் அனுமதி அளித்தது. ஆனால், சுற்றுச்சூழல் பிரச்னைகள், இந்த காற்றாலைகளில் உற்பத்தியாகும் மின்சாரம் கூடுதல் விலைக்கு இலங்கை மின்வாரியத்திற்கு விற்கப்படும் என்ற கவலைகளால் ஆரம்பத்திலிருந்தே இந்தத் திட்டம் எதிர்ப்பைச் சந்தித்து வருகிறது.

தேர்தல் பிரசாரத்தின்போது அதானியின் காற்றாலை மின்திட்டத்திற்கு எதிராகப் பேசியதை வைத்தே, அவர் இந்தியாவுக்கு எதிரான அணுகுமுறையைக் கொண்டிருக்கலாம் என குறிப்பிடப்படுகிறது. அது சரியான பார்வையல்ல என்கிறார் கொழும்பு பல்கலைக் கழகத்தின் கௌரவப் பேராசிரியர் ஜெயதேவா உய்யங்கொட. "அநுர குமார திஸாநாயக்கவைப் பொருத்தவரை இலங்கையில் இந்தியாவின் பங்கு குறித்த நிதர்சனத்தை ஏற்றுக்கொள்வார் எனக் கருதுகிறேன். மற்ற பிராந்திய சக்திகளையும் அவர் எதிர்கொள்ள வேண்டும். அதானி திட்டத்தைப் பொறுத்தவரை, பொருளாதார ரீதியாகவும் சூழல் ரீதியாகவும் அது மிகப் பெரிய சர்ச்சைக்குள்ளான விவகாரம். மோதியும் அதானியும்தான் அந்தத் திட்டம் குறித்து மறு பரிசீலனை செய்யவேண்டும்." என்கிறார் ஜெயதேவா உய்யங்கொட.

இதே கருத்தையே முன்வைக்கிறார் அகிலன் கதிர்காமர். "அதானியின் காற்றாலை மின் திட்டத்தைப் பொருத்தவரை, அது இந்தியாவின் திட்டம் என்பதற்காக எதிர்க்கப்படவில்லை. இந்தத் திட்டம் தொடர்பாக ஜே.வி.பி. மட்டுமல்ல, மற்றவர்களாலும் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அந்தத் திட்டம் தொடர்பாக பல சூழலியல் ரீதியான, பொருளாதார ரீதியான விமர்சனங்கள் உள்ளன. அந்த ஒரு விவகாரத்தை வைத்து மட்டும் ஜே.வி.பி. - இந்தியா உறவை தீர்மானிக்க முடியாது. அவர் இந்தியாவுடன் அனுசரணையுடன் இருப்பார் என்றே கருதுகிறேன்" என்கிறார் அவர்.

இலங்கையின் Department of External Resources அளிக்கும் தகவல்களின்படி பார்த்தால், இலங்கைக்கு கடன் அளித்த நாடுகளில் சீனா முதலிடத்திலும் ஜப்பான் இரண்டாம் இடத்திலும் இந்தியா மூன்றாவது இடத்திலும் இருக்கிறது.

இம்மாதிரியான தருணத்தில் இந்தியாவை உதாசீனம் செய்வது போன்ற சிக்கலான சூழலை அவர் ஏற்படுத்த மாட்டார் என்கிறார் கிளாட்ஸன். "அநுரவைப் பொருத்தவரை இந்தியத் திட்டங்கள் மீது விமர்சனங்களை முன்வைக்கிறார். ஆனால், சீனாவைப் பற்றி விமர்சிப்பதில்லை. எனவே அவரிடம் ஒருவிதமான பாரபட்சம் இருக்கிறது என்று சொல்லலாம். இருந்த போதும் இலங்கை இன்னமும் பொருளாதார நெருக்கடியில்தான் இருக்கிறது. இந்தியா அளிக்கும் நிதியுதவி அந்நாட்டிற்குத் தொடர்ந்து தேவைப்படும். பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது உடனடியாக நிதியுதவி செய்தது இந்தியாதான். இந்த விஷயங்களை புதிய ஜனாதிபதி மனதில் கொள்வார் என கருதுகிறேன். இந்தியாவைத் தவிர்த்துவிட்டு, ஒரு சிக்கலான சூழலுக்கு நாட்டை இட்டுச்செல்ல மாட்டார்" என்கிறார் கிளாட்ஸன் சேவியர். இந்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் சஜித்திற்கு கூடுதல் வாக்குகள் கிடைத்திருப்பதை சுட்டிக்காட்டும் ஜெயதேவா, "தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு அதிகாரப் பகிர்வை அளிப்பது குறித்து அநுர சிந்தித்தாக வேண்டும்" என்கிறார்.

பி.பி.சி.

# அநுரவின் ஆதரவாளர்கள் யாழில் இன்று வெற்றிக் கொண்டாட்டம்









அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற்றதை முன்னிட்டு இன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் ஆதரவாளர்கள் வெற்றியை கொண்டாடினார்கள்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் இன்று காலை பொங்கல் பொங்கி அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றியை ஆதரவாளர்கள் கொண்டாடினார்கள்.

இதன்போது பொதுமக்களுக்கு பொங்கல் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன.





## கேக்வெட்டி அநுரவின் வெற்றியை கொண்டாடிய ஆதரவாளர்கள்

ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து இன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். கிண்ணியா புஹாரியடி சந்தியில் கட்சி ஆதரவாளர்கள் இன்று திசை காட்டி வடிவிலான கேக்கினை வெட்டி வெற்றிக் களிப்பில் ஈடுபட்டனர். இதில் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

## ஒன்பதாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், விருப்பு வாக்கு உள்ளடங்கலாக 57,40,179 வாக்குகளைப் பெற்று, இலங்கையின் 9ஆவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்க தெரிவானார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கும் அநுரகுமார திசாநாயக்க, அந்தப் பதவியை இன்று இராஜினாமா செய்துள்ளார். 2014 முதல் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சித் தலைவராகவும், 2019 முதல் தேசிய மக்கள் சக்தியின் தலைவராகவும் அநுரகுமார திசநாயக்க உள்ளார்.

அநுரகுமார 2019 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு சுமார் 3 வீதமான வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

சந்திரிகா குமாரதுங்கவின் அமைச்சரவையில் 2004 முதல் 2005 வரை வேளாண்மை, கால்நடைத்துறை, காணி, நீர்வளத்துறை அமைச்சராக அநுரகுமார திசநாயக்க இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அநுரகுமார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுரகுமாரவை நேற்று இரவு நேரில் சென்று சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

இதன்போது புதுடில்லி வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி அநுரகுமாரவின் முதல் வெளிநாட்டு பயணமாக இந்திய விஜயம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

## உலக நாடுகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஏனைய நாடுகளுடன் இணைந்து உலக நாடுகளுடன் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வதற்குத் தேவையான தீர்மானங்களை எடுக்கத் தயங்கப் போவதில்லை" எனவும் புதிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.


நாட்டைக் கட்டியெழுப்புவதில் தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டினார். அதற்கு அவர்களின் ஆதரவை வழங்குவார்கள் என நம்புவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்

நாட்டின் புதிய ஜனாதிபதியாக அனுரகுமார திஸாநாயக்க இன்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் எளிமையான முறையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையிலேயே இவற்றைத் தெரிவித்தார்.











# அநுரகுமாரவுக்கு சீன ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்குச் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"சீன அரசின் சார்பிலும் மக்களின் சார்பிலும் தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள். இரண்டு நாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில் இரண்டு நாடுகளும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

நான் இலங்கை - சீன உறவுகளுக்குப் பெரும் முக்கியத்துவத்தை வழங்குகின்றேன். உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்களைச் சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன்." - என்றுள்ளது.

# மனோவின் கூட்டணி அவசரமாக கூடுகிறது

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடக் கூட்டம் இவ்வார இறுதியில் நடைபெறவுள்ளது.

அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள் மற்றும் அடுத்து வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக இதன்போது அவதானம் செலுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அநுரவை வாழ்த்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றமைக்காக உங்களுக்கு எனது நல்வாழ்த்துகள். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளில் இலங்கை விசேட இடத்தைக் கொண்டுள்ளது.

நமது மக்களினதும் இப்பிராந்தியம் முழுவதினதும் நலன்களுக்காக நம்மிடையேயான பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுவாக்குவதற்காக உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்." - என்றும் இந்தியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ட்ரம்ப்பின் வசைபாடல்களும் கமலா ஹறிஸின் நிதானமும்

**அமெரிக்க அதிபர் வேட்பாளாராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டதிலிருந்து அவர் மீது ஆக்கப்பூர்வமான எந்த விமர்சனத்தையும் ட்ரம்ப் முன்வைக்கவில்லை. மாறாக, கமலாவின் மீது வழக்கமான இன ரீதியான தாக்குதலைத் தொடுப்பதிலேயே ட்ரம்பின் கவனம் இருப்பதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர்.**

மாயா



அமெரிக்க அதிபர் தேர்தல் பிரச்சாரம் பரபரப்பு கட்டத்தை எட்டியுள்ளது. அதிபர் பதவிக்காகக் குடியரசுக் கட்சி சார்பில் டொனால்டு ட்ரம்ப்பும் ஜனநாயகக் கட்சி சார்பாக கமலா ஹாரிஸ/ம் போட்டியிடுகின்றனர்.

முன்னதாக, ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட பாளராக ஜோ பைடன் அறிவிக்கப்பட்டார். வயது மூப்பு சார்ந்த விமர்சனங்கள் ஜோ பைடன் மீது வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து வேட்புமனுவை பைடன் திரும்பப்பெற்றார்.

அவருக்குப் பதிலாக கமலா ஹாரிஸை அதிபர் வேட்பாளராக ஜனநாயகக் கட்சி அறிவித்தது.

இந்தியா - ஜமைக்கா குடும்பப் பின்னணியைக் கொண்டவர் கமலா ஹாரிஸ். அந்த வகையில் ட்ரம்ப் பின் இனவாத அரசியலை எதிர்க்கும் வலுவான போட்டியாளராகவே கமலாவை அரசியல் நிபுணர்கள் பார்த்தனர். வல்லுநர்களின் கணிப்பிற்கு வலுசேர்க்கும் வகையில் கமலாவின் வருகை அதிபர் தேர்தல் களத்தைப் பரபரப்பானதாக்கியது.

அமெரிக்க அதிபர் வேட்பாளாராக கமலா ஹாரிஸ் அறிவிக்கப்பட்டதிலிருந்து அவர் மீது ஆக்கப்பூர்வமான எந்த விமர்சனத்தையும் ட்ரம்ப் முன்வைக்கவில்லை. மாறாக, கமலாவின் மீது வழக்கமான இன ரீதியான தாக்குதலைத் தொடுப்பதிலேயே ட்ரம்பின் கவனம் இருப்பதாக ஜனநாயகக் கட்சியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். அக்குற்றச்சாட்டுக்கு வலுசேர்க்கும் விதத்தில் பிரச்சாரக் கூட்டங்களில் ஆதிக்க மனநிலையோடு ட்ரம்ப் வெளிப்படுத்திய உடல்மொழி, முகம் சுளிக்கும்படி அமைந்து விவாதத்துக்கு உள்ளானது.

சமீபத்தில் வடக்கு கரோலினா மாகாணத்தில் குடியரசுக் கட்சி சார்பில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான ட்ரம்ப் ஆதரவாளர்கள் கூடியிருந்தனர்.

அவர்கள் மத்தியில் பேசிய ட்ரம்ப், "கமலாவை யாருக்கும் பிடிக்கவில்லை அவர் அமெரிக்காவின் முதல் பெண் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது நாட்டிற்கே பெரும் அவமானம்" எனக் கூறினார். இதில் கமலாவின் பெயரை வேண்டுமென்றே பலமுறை எள்ளல்கலந்த தொனியில் தவறுதலாக உச்சரித்தார். பிற தலைவர்கள் ட்ரம்ப்பின் உச்சரிப்பைத் திருத்தியபோது ட்ரம்ப் அதை ஏற்கவில்லை.

இதற்கு முன்னரும் பிரச்சாரக் களத்தில் கமலாவை, 'அவர் ஒரு பைத்தியக்காரப் பெண், மோசமானவர்' என அரசியல் நாகரிகமற்ற சொற்களை ட்ரம்ப் பொதுவெளியில் எவ்விதத் தயக்கமுமின்றிப் பயன்படுத்தினார்.

ட்ரம்ப்பின் இத்தகைய வெறுப்புப் பேச்சு தீவிரமாகப் பரவ, "பெண்கள் எவ்வளவு உயரிய பதவிகளை அடைந்தாலும் இனம், நிறம், பாலினம் சார்ந்து விமர்சிக்கப்படுவது தொடர்கிறது" என கமலா ஹாரிஸ/க்கு ஆதரவாகப் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் பலரும் குரல் கொடுத்தனர்.

ஜோ பைடனுடன் ஒப்பிடுகையில் தேர்தல் பிரச்சாரங்களில் கமலா ஹாரிஸ், ட்ரம்பிற்குக் கடும் சவாலாக இருக்கிறார். ட்ரம்ப்பின் கேலி, கிண்டல்களை ஒதுக்கிவைத்துத் தரவுகள் மூலம் தன் விவாதத்தை முன்நகர்த்தி வருகிறார் கமலா ஹாரிஸ்.

அதிபர் தேர்தல் நேரடி விவாதத்தில் ட்ரம்ப் - கமலா பங்கேற்றபோது பிரச்சாரங்களில் ட்ரம்ப் பயன்படுத்திய வசவு மொழிகளை மறந்து, முதலில் கை குலுக்கி விவாதத்தைத் தொடங்கிவைத்தார் கமலா.


விவாதத்தில் இன, பாலின ரீதியாக ட்ரம்ப் தன்னை வசைபாடியபோது பதற்றம் அடையாமல் அரசியல் நாகரிகத்துடன் கமலா ஹாரிஸ் பதிலளித்தார். அந்த வகையில் அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் ட்ரம்ப்பைவிட கமலா ஒரு படி மேலே சென்றுவிட்டார் என்கின்றனர் கமலா ஆதரவாளர்கள்.



# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நடைபெற்ற கொக்கட்டிசோலை தேரோட்டம்











(வி.ரி.சகாதேவராஜா)

தேர்தல் களேபரத்திற்கு மத்தியில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த தேரோட்ட வைபவம் மிகவும் சிறப்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

ஆலய பிரதம குருக்கள் சிவசிறி மு.கு.சச்சிதானந்த குருக்கள் முன்னிலையில் ஆலய தலைவர் இ. மேகராசா (அதிபர் ) தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. பல்லா யிரக்கணக்கான பக்தர்கள் தேர்தல் நிலவரத்தையும் கவனிக்காமல் அங்கு ஒன்று கூடினர்.

ஆலயத்தில் பூஜைகள் இடம் பெற்று இரண்டு அலங்கார சித்திரத்தேரில் தெய்வங்கள் ஆரோகணிக்க அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க தேர்கள் அசைந்தன.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடிக்க அடம் பிடித்தனர். எனினும் பகுதி பகுதியாக அவர்கள் நெரிசலுக்கு மத்தியில் வடம் பிடித்தனர்.

தேரோட்டம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.09.2024இல் வெளியிடப்பெற்றது.